தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் துறையும், இந்திய புகையிலை கார்ப்பசேரசனும் (ITC) இணைந்து சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வு பேரணியை இன்று மாலை 5 மணியளவில் நடத்தியது.

இவ்விழாவில் இந்திய புகையிலை கார்ப்பரேசன் சார்பாக தேக்கம்பட்டி கிளை செயல் அதிகாரி சிவகுமார் மற்றும் முதன்மை ஒருங்கிணைப்பாளர் சண்முகசுந்தரம் ஆகியோர் காகித கழிவு மறுசுழற்சியின் முக்கியத்துவம் குறித்து பேசினார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்து திடக்கழிவின் முக்கியத்துவம் குறித்து பேசினார். மேலும், பல்கலைக்கழக துறைத்தலைவர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் காகித குப்பையைப் போட குப்பைத் தொட்டிகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சுற்றுப்புறச்சூழல் துறையின் உரக்கழிவு கிடங்கின் பின்புறமுள்ள காலி இடங்களில் மரக்கன்றுகளை நட்டார். அதன்பின் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் மரக்கன்றுகளை நட ஆரம்பித்தனர்.

அதன் தொடர்ச்சியாக வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் இணைந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். இப்பேரணியை துணைவேந்தர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணியானது சுற்றுச்சூழல் துறையின் உரகழிவு கிடங்கில் துவங்கி தடாகம் ரோடு, லாலி ரோடு வழியாக மீண்டும் பல்கலைக்கழக வளாகத்தை அடைந்தனர். பேரணி செல்லும் வழிகளில் துண்டுப் பிரசுரங்களை மாணவர்கள் மக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒருங்கிணைத்தனர்.

மேலும், சுற்றுப்புறச்சூழல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. ஆவுடைநாயகம், இந்திய புகையிலை கார்ப்பரேசன் சார்பாக தேக்கம்பட்டி கிளை செயல் அதிகாரி சிவகுமார், முதன்மை ஒருங்கிணைப்பாளர் சண்முகசுந்தரம் மற்றும் வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்